பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible] : இரா. செழியன் [illegible]

மலர் : 19] சென்னை : புரட்டாசி 28 (14—10—71) வியாழன் வெளியூர் : புரட்டாசி 29 (15—10—71) வெள்ளி [இதழ் : 101

அறுவைச் சிகிச்சை பெறுவோருக்கு அன்பளிப்பு

"கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள முன்வரும் எல்லாப் பெண்களுக்கும் ஒவ்வொரு புடவை பரிசளிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் சீதாராமதாஸ் அறிவித்தார்.

"தீவிரக் கருத்தடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மூன்று மாதங்கள்வரையில் இதுபோன்று தரப்படும்" என்றும் கலெக்டர் அறிவித்தார்.

நெல் கொள்முதல் இலக்கைக் குறைக்க வேண்டும்

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தத் தமிழக அரசு கடைபிடிக்கும் முறையே சரியானது

டில்லியில் அமைச்சர் ப. உ. சண்முகம் நிலைமை விளக்கம்

புதுடில்லி, அக். 14—

"உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து வினியோகிக்கத் தனியார் துறையினரை அனுமதிப்பது என்ற முறையைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கடைபிடித்து வரும்"

என்று டெல்லியில் நடைபெற்றுவரும் முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தெரிவித்தார்; ஆயினும், 'எந்த நிலைமையையும் சமாளிக்கும் நோக்கத்துடன் போதிய அளவு கையிருப்பு வைத்துக்கொள்ளவும், இதன் மூலம் நெருக்கடி நிலை தோன்றாமலிருக்கவும் கவனித்துக்கொள்ளப்படும்' என்றும் அவர் அறிவித்தார்.

வேளாண்மை விலைக் குழு, தனது அறிக்கையில், தமிழ்நாடு உட்பட சில மாநிலங்கள் கொள்முதல் செய்வதில் தீவிரம் காட்டுவதில்லை என்று கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், 'தமிழகத்தின் நடவடிக்கை சரியானதே' என்று கூறினார்.

பெரும் அளவில் அரசே கொள்முதல் செய்வது வெளி மார்க்கெட்டில் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று தமிழக அரசு கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

"உற்பத்தியும் — தேவையும் சீராக இருந்துவரும்போது, அரசே பெரும் செலவில் கொள்முதல் பணியில் ஈடுபடுவது அவசியமற்றது என்று கருதுகிறோம்; மேலும், தற்போது விலைவாசி நிலைமையும் ஒழுங்காக இருக்கிறது" என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

"போதிய அளவு சேமித்துவைக்கப்படுவதன்மூலம், பற்றாக்குறை மாதங்களில் விலை உயர்வு ஏற்படாது கட்டுப்படுத்த முடிகிறது; கடந்த ஆண்டிலிருந்து எங்களுடைய அனுபவம் இதை உறுதி செய்கிறது" என்று அவர் விளக்கிக் கூறினார்.

"ஓரிரு மாதங்கள் தவிர, எல்லா மாதங்களிலும் விலைவாசி சீராக இருந்துவருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று வேளாண்மை விலைக் குழு நிர்ணயித்திருந்த குறியளவைக்குறைக்க வேண்டும்" என்று அமைச்சர் ப. உ. சண்முகம் கேட்டுக்கொண்டார்.

வேளாண்மை விலைக் குழு, '5 இலட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும்' என்று நிர்ணயித்திருந்தது; '1.75 இலட்சம் டன் கொள்முதல் செய்தால் போதும்' என்று அமைச்சர் கருத்தறிவித்தார்; 'இதில் 60,000 டன் மத்திய சேமிப்புக்காக உணவுக் கார்ப்பரேஷனும், படி அரிசித் திட்டத்துக்காக மீதியை மாநில அரசும் கொள்முதல் செய்யலாம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கடந்த ஆண்டில் 1.25 இலட்சம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், விலைக் குழுவின் பரிந்துரையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்வதாக அவா தெரிவித்தார்.

ஒரு குவிண்டால் நெல் விலை ரூ. 48 என்றிருப்பதை ரூ. 49 ஆக உயர்த்த விலைக் குழு யோசனை கூறியிருந்தது.

"மத்திய அரசின் கையிருப்புக்குக் கொள்முதல் செய்யும் உணவுத் தானியத்துக்கு நாடெங்கும் ஒரே மாதிரியான விலை தர வேண்டும்" என்று திரு. ப. உ. சண்முகம் பலமாக வற்புறுத்தினார்.

"கொள்முதல் செய்யப்படும்போது மத்திய அரசு, அந்தந்த மாநிலத்தின் விலை நிலவரத்தைக் கவனிக்கக் கூடாது" என்று அவர் கூறினார்.

"அந்த நிதி மாநிலத்தின் நிலவரத்துக்கேற்ப, விலைவாசியைக் கட்டுப்படுத்தும்வகையில் மாநில அரசுகளால் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன; ஆனால் மத்திய அரசு கொள்முதல் செய்யும் தானியங்களுக்கு எல்லா மாநிலங்களிலும், அந்தந்த மாநிலத்தின் விலையைக் கருதாமல் ஒரே சீரான விலையே கொடுக்கவேண்டும்; மாநில அரசு நிர்ணயித்துள்ள விலையையே மத்திய அரசு கொள்முதல் விலையாகக் கொடுப்பது சரியல்ல" என்றும் அமைச்சர் கூறினார்.

சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் மாநாடு

மத்திய அரசு கூட்டுகிறது

சிவில் பாதுகாப்புத் துறைகளின் தலைவர்கள் மாநாட்டை அக்டோபர் 26-ம் நாளன்று மத்திய அரசு கூட்டியிருக்கிறது.

இலங்கையின் மக்கட் தொகை

8 ஆண்டில் 20 இலட்சம் பெருக்கம்

கொழும்பு, அக். 14—

கடந்த 8 ஆண்டுகளில் இலங்கையின் மக்கள்தொகை 20 இலட்சத்துக்குமேல் உயர்ந்திருக்கிறது.

1963-ல் இலங்கை மக்கட்தொகை 1,05,82,000-ஆக இருந்தது; இப்போது 1,27,47,000 ஆக அது உயர்ந்திருக்கிறதாம்.

கொழும்பு நகரத்தின் மக்கள் தொகை 5,11,000-ஆக இருந்தது 5,63,000-ஆகவும், யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகை 94,000-ஆக இருந்தது 1,06,000 ஆகவும் உயர்ந்திருக்கிறது.

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடும் ஜனசங்கம்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கடும் தாக்கு

பெல்காம், அக். 14—

"நாட்டின் எல்லையில் ஏற்பட்டுள்ள அபாயத்தைச் சமாளிக்க மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்; நமது எல்லைகளில் என்ன நடக்கிறது என்பதை உறுதியாகக் கூற இயலாது; ஆனால், எத்தகைய நிலைமைக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, பெல்காம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

திட்டமும் கொள்கையும் ஜனசங்கத்திற்கு ஏது?

"ஜனசங்கத்திற்குக் கொள்கை — திட்டம் எதுவும் கிடையாது; நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்கள் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வருகின்றனர்"

என்று குறிப்பிட்ட தலைமையமைச்சர், 'நாட்டுக்குப் பேரபாயம் ஏற்படும்போது, அவர்களில் எத்தனைப் பேர் அதைச் சமாளிக்க முன்வருவர்?' என வினவினார்.

"ஆர்ப்பாட்டங்களின் மூலம் அவர்கள் என்னை நிர்ப்பந்திக்க முயற்சிக்கின்றனர்; அதற்கெல்லாம் நான் அஞ்சப்போவதில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நெருக்கடி நிலையில் நாடு?

சவாண் அபாய எச்சரிக்கை

புதுடில்லி, அக். 14—

"வங்க தேசப் பிரச்சினை, மிகவும் சிக்கலான நிலைமையை அடைந்துவிட்டது; எனவே, எப்படிப்பட்ட அவசர நிலைக்கும் நாடு தயாராக இருக்க வேண்டும்"

என்று மத்திய நிதியமைச்சர் சவாண், மாநில முதலமைச்சர்களிடம் எடுத்துரைத்திருக்கிறார்.

1965-ல் பாகிஸ்தான் ஊடுருவிய சாம்ப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றம்

போர் ஒத்திகைகள் நடைபெற்றதாகத் தகவல்

ஸ்ரீநகர், அக். 14—

சாம்ப் — ஜாவுரியன் பகுதியில் பாகிஸ்தான் தரப்பில் உள்ள எல்லைக் கிராமங்களில் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்களாம்.

ஒரு வார காலத்திற்குள் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுவிடுவார்களாம்.

1965-ல் இந்தப் பகுதியில் பாகிஸ்தான் ஊடுருவியதைத் தொடர்ந்துதான் இந்தியா — பாகிஸ்தான் போர் தொடங்கியது.

காஷ்மீரில், ஊரி பகுதிக்கு எதிர்த்தாற்போல் பாகிஸ்தான் தரப்பில் உள்ள பல கிராமங்களில் மக்கள் இம்மாதம் முதல் வாரத்தில் வெளியேற்றப்பட்டார்கள்.

சென்ற வாரம் இந்தக் கிராமங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர் இரண்டு ஒத்திகைகளை நடத்தியிருக்கின்றனர்.

எல்லையில் பதட்ட நிலை

பாகிஸ்தானே பொறுப்பு — ஐ. நா.-வில் இந்தியா முறையீடு

சென்னை, அக். 14—

"இந்தியா — பாகிஸ்தான் எல்லையில் நிலவும் பதட்ட நிலைக்குப் பாகிஸ்தானே பொறுப்பாளி" என்று ஐ. நா. அவையில் இந்தியப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

"கிழக்கு வங்கத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்று இந்தியா கூறுவது, பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகாது" என்றும் அவர் கருத்தறிவித்தார்.

கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையின் விளைவாக 90 இலட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்" என்று அவர் தெரிவித்தார்.

கிராம அதிகாரிகட்குப் பண்டிகை முன்பணம்

ரூ. 75 கொடுக்க அரசு முடிவு

சென்னை, அக். 14—

கிராம அதிகாரிகளுக்கு உயர்ந்தபட்சம் ரூ. 75 பண்டிகை முன்பணம் அளிப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

கிராம அதிகாரிகள் சங்கம், 'ரூ. 100 முன்பணம் தரவேண்டும்' என்று கேட்டிருந்தது. அவர்களது கோரிக்கையைக் கவனமாகப் பரிசீலித்த பிறகு ரூ. 75 தருவது என்று அரசு முடிவு செய்தது.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2002 புரட்டாசி 28 (14—10—71) வியாழன்

வகுப்புவாத வித்தூன்ற முனையும் வடநாட்டுப் 'பேய்'

வடநாட்டு வகுப்புவாதக் கட்சியான ஜனசங்கம், எப்படியேனும் தமிழ்நாட்டிலும் வேர் விட வேண்டுமென்று கடந்த சில ஆண்டுகளாகவே அரும் பாடுபட்டு வருகிறது; அதற்கு இங்குள்ள சில சனாதனிகளும் -- வகுப்புவாதிகளும் தூபம் போட்டுப் பார்க்கின்றனர்; ஆனால், தமிழ்ப் மண்ணாட்டுக்கு என்றும் ஒத்துவராத அந்தக் கட்சியின் இலட்சியங்களைத் தமிழ் மக்கள் கட்டுப்பாடாக ஏற்க மறுத்துவருகின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி தென்னகத்தில் எந்த ஒரு மாநிலமும் இதுவரை அந்தக் கட்சியை விரும்பி ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை; மத வெறியும் -- வகுப்புக் கலவரங்களும் தொன்றுதொட்டு வடநாட்டுக்கே உரியவையாகையால், அங்கு இந்தக் கட்சி வளர வாய்ப்பு ஏற்பட்டது; ஆனால், தென்னாட்டில் அது என்றும் தலைகாட்ட முடியாது என்பது திண்ணம்.

எப்படியும் தென்னாட்டிலும் தம் கட்சி இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்வதற்காக அக்கட்சியின் தலைவர் வாஜ்பேய் என்பவர், அக்கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தைச் சென்னையில் கூட்டினார்; தமது கட்சிக் கூட்டம் இங்கு நடைபெறுவதைச் சாக்காகக் கொண்டு சென்னையில் முகாமடித்துக்கொண்டு -- தமது ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சில நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று, 'சிறப்புரை' என்ற பெயரால் ஏதேதோ பிதற்றியிருக்கிறார்!

அவருடைய பேச்சுக்களெல்லாம், அமைதியாக இருந்துவரும் தமிழ்நாட்டில் வகுப்பு வெறியைக் கிளறிவிடுவதாகவே உள்ளன.

இந்திய அரசியலில் தாமே பெரிய மேதாவி -- என்று கருதிக்கொண்டிருக்கும் இந்த வடநாட்டு மத வெறியர், தமிழ்நாட்டு ஆட்சியைப் பற்றியும் -- ஆளுங் கட்சியான தி.மு. கழகம் பற்றியும் விமர்சனம் செய்திருக்கிறார்.

அவர் ஒரு அப்பழுக்கற்ற சனநாயகவாதியாகவோ, சமதர்மவாதியாகவோ அல்லது முற்போக்குக் கருத்துடையவராகவோ இருந்து, கழக அரசியல் -- பொருளாதாரக் கொள்கைகளை விமர்சித்திருப்பாரேயானால், அதை நாமும் பொருட்படுத்தியிருப்போம்; அதற்குத் தக்க விதத்தில் பதிலும் சுடச்சுடத் தந்திருப்போம்.

அப்பட்டமான வகுப்புவாதியும் -- மத வெறியருமான அவருடைய பேச்சைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்றே அதனை அலட்சியப்படுத்தி வருகிறோம்.

அதே நேரத்தில், தமிழ் மக்களை, 'ஏதுமறியாத அப்பாவிகள்' எனத் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டு அவர், மதப் பூசலைக் கிளப்பிவிடும் வகையிலும் -- தமிழ் உணர்ச்சியை மட்டந்தட்டும் வகையிலும் பேசிவருவதை எந்தத் தமிழ்மகனும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. தமிழ் மண்ணில் வகுப்புவாதம் வித்தூன்றுமுன் தடுத்து நிறுத்துவதும், இத்தகைய விஷமிகளின் செயல்களை முளையிலேயே கிள்ளியெறிவதும் நமது கடமையாகும்.

தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழர்கள் தம் தாய்மொழியில் வழிபாடு நடத்த வேண்டும் என்று விரும்புவதும், மக்கள் விருப்பத்திற்கிணங்க அரசு நடவடிக்கை மேற்கொள்வதும் மதத்தில் அரசு தலையிடுவதாகுமாம்! 'வடமொழியில்தான் வழிபாடு நடத்த வேண்டும்' என்று வாதிடுகிறார் -- இந்த வடநாட்டு வாஜ்பேய்!

'தமிழர்தம் உரிமையை மறுக்க இவர் யார்?' என்பது நமக்குப் புலப்படவில்லை! உத்தரப் பிரதேசத்திலும் -- மத்தியப் பிரதேசத்திலுமா 'தமிழ் அர்ச்சனை' வேண்டும் என்கிறோம்? அப்படி நாம் கூறியிருந்தால் அதனை எதிர்த்துக் குரலெழுப்ப இந்த வடநாட்டுப் 'பேய்'க்கு உரிமை இருக்கிறது. தமிழ்நாட்டில் வந்து இருந்துகொண்டு தமிழர்கட்கு எதிராகக் கருத்து அறிவிக்க இவருக்கு எப்படித் துணிவு வந்தது? இங்குள்ள சில சனாதனிகளும் -- தமிழ் இனப் பகைவர்களும் கொடுக்கும் ஆதரவால் அல்லவா? தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு குடிமகன் வாஜ்பேயின் மாநிலத்தில் சென்று இந்திக்கு எதிராகக் குரல் எழுப்ப முடியுமா? இங்குள்ள தமிழ்த் துரோகிகளும், சனாதன வெறியர்களும் இதனை உணர்ந்து திருந்த வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

"ஆண்டவனை எந்த மொழியில் வழிபட வேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டுமேயன்றி, அரசாங்கம் உத்தரவிடக்கூடாது" என்று சனநாயகம் பேசுகிறார் -- இந்த சனாதன வெறியர்களின் தலைவர்!

தமிழ் மக்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்த தி. மு. கழக அரசு, தனக்கு வாக்களித்த மக்களின் விருப்பமறிந்துதான் தமிழ் வழிபாட்டுக்கு வழி செய்திருக்கிறது; தமிழ் வழிபாட்டுக்கு எதிராக இன்றைக்கு எந்தத் தமிழன் குரல் எழுப்புகிறான்? தொன்றுதொட்டுத் தமிழுக்கும் -- தமிழ் இனத்துக்கும் எதிராகச் செயல்பட்டுவரும் யாரோ சிலர் கூச்சல் போடுகிறார்கள் என்பதற்காக, தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டு வடமொழியை இங்கு வாழ வைக்க வேண்டுமா?

"முஸ்லிம்களும் ஒரு குறிப்பிட்ட மொழியில்தான் தொழுகையை நடத்த வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்துமா?" என்று வாஜ்பேயர் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்!

இந்தி வெறியர்களைப்போல், எதையும் யார்மீதும் வலியத் திணிக்க விரும்புபவர்கள் அல்லர் தமிழர்! முஸ்லிம் மக்களே விரும்பிக் கேட்டால், அதனையும் நிறைவேற்றி வைப்பதில் இந்த அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது? தமிழ் மக்கள் நீண்ட நெடுங்காலமாக யோசித்து விரும்பிக் கேட்டதைத்தான் இந்த அரசு நிறைவேற்றிவருகிறது.

காங்கிரசார் இந்த மாநிலத்தை ஆண்டபோதே 'தமிழ் அர்ச்சனை'க் கோரிக்கை எழுப்பப்பட்டது; ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. தமிழ் மக்களின் உரிமை வேட்கைகளையெல்லாம் அலட்சியப்படுத்தியதன் விளைவைத்தான் 1967 தேர்தலில் காங்கிரசார் அனுபவிக்க நேர்ந்தது.

மக்கள் விருப்பமறிந்து அதனை நிறைவேற்றத் தானே முன்வந்து செயல்பட்டதால்தான், 1971 தேர்தலில் மீண்டும் தி. மு. கழகமே முன்னினும் வலிமையுடன் ஆட்சிபீடத்தில் அமர்ந்தது; இதனை வாஜ்பேய் உணர வேண்டும்.

முஸ்லிம்களுக்கு இந்த அரசின்மீது வெறுப்பை உண்டாக்கவும், இந்து -- முஸ்லிம் வேற்றுமைகளைக் கிளறிவிடவும் வாஜ்பேயர் தமது பேச்சின் மூலம் முனைந்திருக்கிறார்; ஆனால், அவர் நினைப்பதுபோல் தமிழ் மண்ணில் ஒருபோதும் நடக்கப்போவதில்லை; இந்து -- முஸ்லீம் என்ற வேறுபாடின்றி சகோதரர்களாகப் பழகிவரும் தமிழ் மண்ணில் வகுப்புவாத விஷ வித்தை ஊன்ற முயன்றுவரும் இந்த வடநாட்டு வகுப்புவாத வாஜ்பேய்க்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்; அவருக்குத் தூபம் போட்டுவரும் தமிழ்நாட்டுத் துரோகிகட்கும் சரியான புத்தி புகட்டத் தமிழ் மக்கள் தவறக்கூடாது.

மகாத்மா காந்தியடிகளைக் கொன்ற கோட்சே கும்பலின் மறுபதிப்புதான் -- இந்துமகா சபையின் மாற்றுருதான் -- இந்த ஜனசங்கம் என்பதை தமிழர்கள் இன்னும் மறந்துவிடவில்லை. இந்த சன விரோத -- சனநாயக விரோத -- வட நாட்டுக் கட்சிக்குத் தமிழ்நாட்டில் ஒரு ஆள் கூடக் கிடைக்கவில்லை என்ற நிலை தொடர்ந்து நீடிக்கச் செய்வதே இந்த 'ஆட்'களுக்கு நாம் புகட்டும் பாடமாகும்.

தமிழ்நாட்டில் ஆள்பிடிக்க வந்திருக்கும் இந்த வடநாட்டு மதவாதப் 'பேய்'க்கும் -- அதற்கு வால் பிடிக்கும் திருக்கூட்டத்துக்கும் தமிழ் மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்களாக!

குடிசை வாழ் குழந்தைகட்குச் சத்துணவு

தமிழக அரசு ஆர்வத்துடன் செயல்படுத்திவரும் திட்டம்

மத்திய அரசின் இலக்கையும் தாண்டிவிட்டது

சென்னை, அக். 14—
நகர்ப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை மக்களின் 'மூன்று' வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு 1970-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கப்பட வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கை 1,30,000 என்கிற இலக்கினை மத்திய அரசு நிர்ணயித்தது.

ஏழை -- எளிய மக்களுக்கு உதவி செய்வதில் அளவற்ற ஆர்வம் காட்டும் தமிழக அரசு இப்போது 1,49,000 குழந்தைகட்குச் சத்துணவு வழங்குகிறது.

மத்திய அரசு நிர்ணயித்த 'இலக்கு'க்கு மேல் 19,000 குழந்தைகட்குச் சத்துணவு வழங்குகிறது.

இந்த 1,49,000 குழந்தைகள் யாவும், தமிழ்நாட்டில் உள்ள ஓர் இலட்சம் மக்கள் தொகை உள்ள நகர்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்கள்.

சென்னை நகரில் மட்டும் 80,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது.

இவை தவிர, சேலம் மாவட்டத்தில் உள்ள மலைசாதி மக்களின் 3,500 குழந்தைகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

இன்னும் ஏராளமான குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் நோக்கத்துடன் சத்துணவு வழங்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையை 1,59,000-ஆக உயர்த்தத் தமிழக அரசு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

தற்போது 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதை விரிவுபடுத்தி ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகட்கும் சத்துணவு வழங்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

இது தவிர, நோயாளியான தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

இச்செயல் மூலம் 2,50,000 குழந்தைகளுக்கும் — 50,000 தாய்மார்கட்கும் சத்துணவு வழங்க வழி ஏற்படும்.

சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ள இத்திட்டம், தற்போது அரசின் சமுதாய நலத்துறைச் செயலாளரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சிறு குழந்தைகள் -- கர்ப்பமுள்ள தாய்மார்கள் -- நோயாளியான தாய்மார்கள் பலனடைவதால், இத்திட்டத்தைத் தமிழ்நாடு முழுவதிலும் மகளிர் நலத்துறை இயக்குநர் நிர்வகிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டிருக்கிறது.

சென்னை நகரில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் சிறப்பு அலுவலர் இனி மகளிர் நலத்துறை இயக்குநரின்கீழ்ப் பணிபுரிவர்.

சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்தும் துணைத் தாசில்தார்கள் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் பணிபுரிவார்கள்.

அண்ணா நகரில் 'பர்மா பஜார்'

நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடம் தரப்படுகிறது

போலீசு கமிஷனர் தரும் தகவல்கள்

சென்னை, அக். 14—
பர்மாவிலிருந்து அகதிகளாகத் தமிழ்நாட்டுக்குத் திரும்பியுள்ள தமிழர்கள், சென்னைக் கடற்கரை இரயில்வே நிலையத்தையொட்டி வரிசையாகக் கடைகள் அமைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள்.

'பர்மா பஜார்' என்று அழைக்கப்படும் இந்தக் கடைகளில், வெளிநாட்டுக் கடிகாரங்கள் -- ரேடியோக்கள் -- டேப் ரிகார்டர் -- துணிமணிகள் உட்பட பல்வேறு விதமான பொருட்கள் விற்கப்படுகின்றன.

நடைபாதைமீது இந்தக் கடைகள் இருப்பதால், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதைக் கருதி, வேறு இடத்துக்குக் கடைகளை மாற்றப் போலீசார் திட்டமிட்டிருக்கின்றனர்.

இது முடிவு பற்றி சென்னை நகர போலீசுக் கமிஷனர் ஷெனாய் நிருபர்களிடம் கூறியதாவது:—

"'பர்மா பஜார்' வியாசர்பாடி -- அண்ணா நகருக்கு மாற்றப்படும்; இதற்காக அங்கு இடம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பர்மா பஜாரில் கடை வைத்திருப்பவர்களில் பெரும்பாலோர் வியாசர்பாடியில் இருக்கிறார்கள்; வியாசர்பாடிக்கு அருகே அண்ணா நகர் இருப்பதால், அவர்களுக்கு அது வசதியாக இருக்கும்; என்றாலும், அண்ணா நகருக்குக் கடைகளை மாற்றுவது பற்றிப் பரிசீலித்துச் சொல்வதாக வியாபாரிகள் கூறியிருக்கிறார்கள்.

தற்போதுள்ள இடத்தைக் காலி செய்யும்படி வியாபாரிகளுக்கு நோட்டீசு தரப்பட்டிருக்கிறது; அதன்படி அக். 15-ம் தேதிக்குள் கடைகளை அவர்கள் அகற்றிவிட வேண்டும்."

சைனா பஜார் வியாபாரிகள்

சைனா பஜாரில் கடைவைத்திருந்த வியாபாரிகளுக்குத் தற்காலிக மாற்று இடமாக இராஜா அண்ணாமலை மன்றத்துக்கு அருகிலுள்ள 'லைட் ஹவுஸ்' ரோடு ஒதுக்கப்பட்டிருக்கிறது; மாநகராட்சியின் அனுமதி கிடைத்ததும் இந்தப் பகுதியில் அவர்கள் நிரந்தரமாகக் கடை வைத்துக்கொள்ளலாம்.

வால்டாக்ஸ் சாலையிலுள்ள நடைபாதை வியாபாரிகள்

வால்டாக்ஸ் சாலையிலுள்ள நடைபாதை வியாபாரிகள், பாதசாரிகள் செல்வதற்காக நடைபாதையில் நான்கு அடிகளை விட்டுவிட்டுப் பாக்கியுள்ள இடத்திலிருந்து வியாபாரம் செய்ய முன்வந்துள்ளனர்; இதனை அதிகாரிகள் பரிசீலனை செய்துவருகின்றனர்."

தொலைபேசித் துறையில் இந்தித் திணிப்பு

கோவை, அக். 14—
இங்குள்ள மத்திய தொலைபேசி அலுவலகம், அதன் ஊழியர்களுக்கு இந்தித் தட்டெழுத்தும் பயிற்சியும், இந்தி டெலிபிரிண்டர் பயிற்சியும் அளித்துவருகிறது.

இந்த மத்திய தொலைபேசி அலுவலகம், முன்னர் முப்பது நிலையங்களோடு இணைக்கப்பட்டிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணாவை வழிகாட்டியாக கொள்க!

மாணவர்களுக்கு நாவலர் நெடுஞ்செழியன் அறிவுரை

மக்கள் இதயத்தில் இடம் பெற்றுள்ள அண்ணாவின் மாண்பு குறித்துச் சிறப்புரை

சென்னை, அக். 14—
"மாணவர்கள், அறிவில் -- ஆற்றலில் -- பண்பாட்டுத் திறனில் -- சொல் வன்மையில் பேரறிஞர் அண்ணா அவர்களை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநிலக் கல்லூரி மாணவரிடையே உரையாற்றுகையில் வலியுறுத்தினார்.

சென்னை மாநிலக் கல்லூரியில், தமிழ்ப் பேரவைத் தொடக்க விழாவும் -- பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்தவர்களை, கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் மெ. சுந்தரம் வரவேற்றார்.

பேரவையைத் தொடங்கி வைத்தும் -- அண்ணா பிறந்த நாள் விழாவுக்குத் தலைமை வகித்தும் தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் சிறப்புரையாற்றினார்; அவர் தமது உரையில் கூறியதாவது:—

"எவ்வளவு படித்தாலும், படித்ததை வெளியுலகுக்குச் சொல்வதற்குச் சொல்லாற்றல் தேவை.

சொல்லாற்றல் மிக்கவர்கள் வாழ்க்கையின் எந்தத் துறையில் ஈடுபட்டாலும், அந்தத் துறையில் முன்னுக்கு வருவார்கள்!

சொல்லிலே விளைகின்ற தவறு, பகையை மூட்டி -- அதன் காரணமாக நாடுகளுக்கிடையே போர்களைக்கூட மூட்டி விடுவதுண்டு.

வல்லமையுடன் சொல்லைப் பயன்படுத்துகிறவர்கள் எல்லாத் துறையிலும் மேல்நிலை அடைவர்.

அப்படிச் சொல்லாற்றல் பெற்றவர்கள் முன்னால் உலகமே ஓடிவந்து நின்று, அவர்கள் இடும் கட்டளையை நிறைவேற்றும்.

அத்தகைய ஆற்றல் படைத்திருந்த காரணத்தினால்தான், பேரறிஞர் அண்ணாவின் சுட்டுவிரல் ஆடினால் நாடு ஆடிற்று!

தோற்றத்தினால் மற்றவரைக் கவரக் கூடியவர் அல்லர் அண்ணா; 'மோதிலால் நேருவின் மகன் ஜவகர்லால்' என்று அழைக்கப்பட்டதுபோல, குடும்பப் பெருமை அண்ணாவுக்குக் கிடையாது.

படிப்பதற்கேற்ற வசதியும் இருந்ததில்லை.

அப்படி இருந்தும், அவர் தமது நாவன்மையினால், தமிழுக்கு -- தமிழ்நாட்டுக்குப் பெரும் தொண்டாற்றினார்.

அது மட்டுமன்றி, அரசியலில் -- சமுதாயத்தில் பெரும் மாறுதலை ஏற்படுத்தினார்.

அப்படிப்பட்ட சாதனை புரிந்த காரணத்தினால்தான் அண்ணா அவர்களை நாடு தனது இதயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறது!

யாரும் எதையும் பெற்றுவிடலாம்; ஆனால் இதயத்தில் இடம்பெறுவது என்பது எளிதான காரியம் அல்ல!

அலெக்சாண்டரை, 'வீரன்' என உலகம் பாராட்டியது!

நெப்போலியன் ஆற்றலை உலகம் பாராட்டியது!

ஐன்ஸ்டைன், சர். சி. வி. இராமன் போன்ற விஞ்ஞானிகளை உலகம் புகழ்ந்தது!

ஆனால் அவர்களையெல்லாம் உலக மக்கள் தங்கள் இதயத்தில் ஏற்றுக்கொண்டதில்லை!

ஆனால், புத்தர் -- ஏசு -- காந்தி -- நேரு -- அண்ணா போன்றவர்களை உலகம் தனது இதயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன? அவர்கள், மனிதத்தன்மைக்காக -- மனிதப் பண்புகள் வளருவதற்காகப் பாடுபட்டவர்கள் என்பதால்தான்!

எத்தனையோ பேச்சாளர்கள் இருக்கிறார்கள்; மக்கள் தாமாகவே முன்வந்து பணம் கொடுத்துப் பேச்சுக் கேட்டது அண்ணாவின் பேச்சைத்தான்!

சிங்கப்பூருக்கு அண்ணா சென்றிருந்தபோது, அவரது கூட்டத்துக்கு 21 ஆயிரம் வெள்ளி (ரூ. 33,000) வசூலாயிற்று.

"பண்டித நேருவுக்கு இந்த அளவுக்குக் கூட்டம் கூடியது. ஆனால் அவருக்கு வந்த கூட்டம் கூடப் பணம் கொடுத்து வந்ததல்ல" என்று சிங்கப்பூர் தலைமையமைச்சரே புகழ்ந்துரைத்தார்.

அண்ணா அவர்கள் அந்தத் தொகையைச் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் -- தமிழ்த் துறை தொடங்க நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

இப்படி, ஆங்கிலம் -- தமிழ் இரண்டிலும் செயலாற்றல்மிக்கு விளங்கினார்.

பேச்சில் -- எழுத்தில் -- கட்டுரை எழுதுவதில் -- சிறுகதை, பெருங்கதை எழுதுவதில் -- இப்படி எல்லாத் துறைகளிலும் ஈடு இணையற்று விளங்கினார்.

நாடகம் எழுதுவதில் -- நடிப்பதில் அவர், ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்தார்.

புகழ் பெற்ற நடிகர்களின் நாடகங்களைவிட அவரது நாடகங்களுக்கு வசூல் அதிகம் கிடைத்தது!

இவ்வளவு திறமைகளையும், அரசியல் துறையில் -- சமுதாயத் துறையில் எதிர் நீச்சல் போடுவதில் பயன்படுத்தி அதில் வெற்றி கண்டார்!

ஏற்கனவே வெற்றி பெற்று -- யாராலும் நகர்த்தமுடியாத காங்கிரசுக் கட்சியை அகற்றிக் காட்டினார்!

இவ்வளவு அரும் ஆற்றலும் திறமையும் பெற்றிருந்தும்கூட, யாரிடமும் காணமுடியாத எளிமையும் அடக்கமும் அண்ணாவிடம் குடிகொண்டிருந்தன!

உலக நாடுகளிலிருந்தெல்லாம் தூதுவர்களும் -- வர்த்தக நிபுணர்களும் -- பொருளாதார நிபுணர்களும் கலந்துகொண்ட உலகப் பொருட்காட்சி சென்னையில் நடைபெற்றபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் முக்கால் மணி நேரம் பேசினார்; பொருளாதாரம் சிறக்க வேண்டுமெனில், விவசாயத் துறையில் வளர்ச்சி காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர் பேசியதை அறிஞர்கள் எல்லாம் என்னிடம் பாராட்டிக் கூறினர்.

இப்படி, எல்லோருடைய இதயம் -- சிந்தை இரண்டையும் கவர்ந்து விளங்கியவர் பேரறிஞர் அண்ணா!

அப்படிப்பட்ட ஆற்றலும் திறமையும் பெற்றவர்களாக விளங்கிடப் பேரறிஞர் அண்ணா அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு நாட்டுக்குப் பணியாற்ற மாணவர்கள் முன்வர வேண்டும்."

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 313/71

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ மார்க்கண்டேயன் கோவில்,
ஸ்ரீ முத்தாலம்மன் கோவிலின் உபகோவில்,
காரைக்குடி,
திருப்பத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம் —மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் காரைக்குடி கிராமம் ஸ்ரீ மார்க்கண்டேயன் கோயில் விஷயமாக:—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் காரைக்குடி கிராமம் ஸ்ரீ மார்க்கண்டேயன் கோயிலுக்குச் சொந்தமாக, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் காரைக்குடி கிராமத்தில் டி. எஸ். எண். 302/2-ல் 321 சதுர அடியும், டி. எஸ். எண். 302/3-ல் 1090 சதுர அடியும் மொத்தம் 1411 (321+1090) சதுர அடி காலி நிலத்தினை ரூ. 2,433.95-க்கு காரைக்குடி நகராட்சிக்கு விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 313/71 டி. 1
நாள் 27—9—71

1. மேற்படி மனு குறித்து, சென்னை-34, நுங்கம்பாக்கம்நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில் 20—11—71 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்துக் கருத்துரைகளோ மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின், அவற்றினை எழுத்து மூலமாக 18—11—71 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரில் விசாரணையின் போதும் தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக.

சென்னை நகர விரிவமைப்புத் திட்டம்

ரூ. 900 கோடி செலவாகும் என மதிப்பீடு

சென்னையைச் சுற்றிலும் 25 மைல் தொலைவில் சிறிய நகரங்கள் உருவாகும்

சென்னை, அக். 14—
அடுத்த 20 ஆண்டுகளில் சென்னை நகரின் மக்கள் தொகை இரு மடங்காகப் பெருகி -- 50 இலட்சம் அளவை எட்டிவிடும்; அப்போது, அனைவருக்கும் நகர்ப்புற வசதிகள் -- வேலை வாய்ப்பு முதலியவற்றை ஏற்படுத்தித் தருவது பெரிய பிரச்சினையாகிவிடும்.

சென்னை நகர விரிவமைப்புத் திட்டத்தின்கீழ், சென்னையைச் சுற்றிலும், 25 மைல் தொலைவில் சிறிய நகரங்கள் ஏற்படுத்தப்படும்; செங்கற்பட்டு -- திருவள்ளூர் -- கும்மிடிப்பூண்டி ஆகியவை மேலும் விரிவமைப்புச் செய்யப்பட்டு இந்தச் சிறிய நகரங்களில் முக்கிய இடம்பெறும்; ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதிகளும் மேலும் பல வசதிகளுடன் மேம்பாடு பெறும்.

சென்னையில் நெரிசலையும் -- நெருக்கடியையும் தவிர்ப்பதற்காகவே இந்தச் சிறிய நகரத் திட்டம் தீட்டப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட நிலையில், சென்னையில் தொழில் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும்; புதிய சிறிய நகரங்களில், புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

சென்னை மாநகர் விரிவமைப்புத் திட்டத்திற்கு நீண்டகால அடிப்படையில் ரூ. 900 கோடி செலவு பிடிக்கும் என மதிப்பிடப்படுகிறது; இதில் தற்போதைக்கு ரூ. 185 கோடி முதலீடு செய்ய வேண்டிவரும்.

சென்னை நகர விரிவமைப்புப் பிரச்சினைகள் பற்றித் தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறைத் துணைச்செயலாளர் எஸ். பார்த்தசாரதி, சென்னை பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் உரையாற்றுகையில் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இப்பிரச்சினைகள்பற்றி ஆய்வு அறிக்கை ஒன்றையும் அவர் தயாரித்துள்ளார்; நகர விரிவமைப்புத் திட்டத்திற்கான உதவி பெறுவதற்காக அந்த ஆய்வு அறிக்கை உலக பாங்கின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்னை

திரு. பார்த்தசாரதி அவர்கள் மேலும் கூறியதாவது:—

"சென்னை நகரில், போக்குவரத்து ஒரு முக்கியப் பிரச்சினையாகிவிட்டது; இதுவரையில் இப்பிரச்சினையைத் தீர்க்க, சாலைகளை அகலப்படுத்துதல் -- பாலங்களை விரிவமைத்தல் -- 'பறக்கும் பாலம்' கட்டுதல் முதலிய கட்டுமானப் பணிகளே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இனி, போக்குவரத்துப் பிரச்சினை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் அணுகப்பட்டு -- அதற்குப் புதிய முறையில் தீர்வு காணப்படும்.

நகரில் கட்டடங்கள் பெருகுவதால், போக்குவரத்துப் பிரச்சினை மிகவும் தீவிரமடைகிறது என்பதும், இதில் ஒரு கருத்தாகும்; உதாரணமாக, ஒரே சாலையில் பல திரைப்படக் கொட்டகைகள் அடுத்தடுத்து கட்டப்படுவதால், அந்தச் சாலையில் போக்குவரத்து மேலும் நெரிசலடைய நேரிடுகிறது.

எனவே, சில பகுதிகளில் மேற்கொண்டு கட்டடங்கள் கட்டக்கூடாது என்று கட்டுப்பாடு விதிப்பதன்மூலம், அப்பகுதிகளின் போக்குவரத்துப் பிரச்சினைகளை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும்.

இதுபோல், வேறு பல கண்ணோட்டங்களிலும் இப்பிரச்னை ஆராயப்படும்.

குடி நீர்ப் பிரச்சினை

அணுசக்தியின் மூலம் இயங்கும் ஒரு தொழிற்சாலையில், கடல் நீரின் உவர்ப்புத் தன்மையை நீக்கிக் குடிநீராக மாற்றவும் திட்டம் தீட்டப்படலாம்; அது இயலக்கூடியதேயாகும்."

நகரப் பேருந்துகளின் நிலை விரைவில் சீரமையும்

விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கை -- வசதி பெருகும்

அமைச்சர் இராமச்சந்திரன் வெளியிடும் தகவல்

சென்னை, அக். 12—
"சென்னை நகரப் பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இன்னும் மூன்று மாதக் காலத்துக்குள் நிலைமை சீர்பட்டு விடும்"

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் கூறினார்.

"விரைவுப் பேருந்துகளை அதிகப்படுத்துவதன் மூலம், அரசுப் போக்குவரத்துத் துறை ஏற்படக்கூடிய நட்டத்தின் அளவு கணிசமாகக் குறையும்" என்றார் அவர்.

அமைச்சர் மேலும் தந்த விளக்கம் வருமாறு:—

"தமிழ்நாட்டில் எக்ஸ்பிரஸ் பஸ்கள் 163 ஓடுகின்றன; இவைகளை மேலும் சீர்செய்து மேம்பாடு செய்வது பற்றி, அக். 15-ம் நாளன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து பேச இருக்கிறேன்.

விரைவுப் பேருந்துகள் நாள்தோறும் 2 அல்லது 3 மட்டுமே தான் பழுதடைகின்றன; அந்த அளவுக்கு நிலைமை திருந்திவிட்டது.

இடையில் விரைவுப் பேருந்துகள் பழுதடைந்தால், 1 மணி நேரத்திற்கு மாற்று வண்டிகள் கிடைக்கும்படியாக ஆங்காங்கே முக்கியமான நிலையங்களில், சில மாற்றுப் பஸ்களை நிறுத்திவைக்க எண்ணியிருக்கிறோம்; அதன் மூலம் பயணிகள் சிரமமுமின்றித் தொடர்ந்து செல்ல முடியும்.

எல்லாப் பஸ்களிலும் 'டாக்டோ' மீட்டர் என்ற கருவி பொருத்தப்படும்; இந்தக் கருவியை வாங்க ஏற்பாடு நடக்கிறது; குறிப்பிட்ட நேரத்தில் பஸ் போய்ச் சேருவதற்கும், 'டீசல்' பயன் அளவைக் கவனிக்கவும், வேகங்களைக் குறித்துக் காட்டவும் இந்தக் கருவி பயன்படும்.

ஒவ்வொரு எக்ஸ்பிரஸ் பஸ்சுக்கும் 2 ஓட்டுநர்கள் இருப்பார்கள்.

சிறு பழுது பார்க்கும் கருவிப் பெட்டியும் இருக்கும்.

மாற்று டயர் -- சக்கரடி பெல்ட் -- ரப்பர் இணைப்பு -- குழாய் உதிரிப் பாகங்களும் இருக்கும்.

இதன்மூலம், இனி ஓட்டுநர்களே சிறு சிறு ரிப்பேர்களைப் பழுது பார்க்கும்படி செய்யப்படும்.

எக்ஸ்பிரஸ் பஸ்களின் நிலைமைகளைச் சீர்திருத்தியபிறகு வேகமும் அதிகரிக்கப்படும்; இப்போது சராசரி 27 மைல் போகின்றன; இனிமேல் 35 மைல்வரை போவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

8 ஆண்டுக்குமேல் ஓடிவிட்ட 89 வண்டிகளை மாற்றிப் புதிய வண்டிகள் 3 மாதத்துக்குள் மாற்றப்படும்.

இரவு நேர எக்ஸ்பிரஸ் பஸ்களில் உள்ள இருக்கைகள் இன்னும் சொகுசாக ஆக்குவதற்காக ஒவ்வொரு 'சீட்டு'களுக்கும் ரூ. 200 வீதம் அதிகம் செலவு செய்து 'குஷன்'கள் அமைக்கப்படும்.

இந்தப் பஸ்களில் பயணிகள் நாள்தோறும் வரும் அளவு 74 சதவிகிதம் இருந்தது; இப்போது 90 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

எக்ஸ்பிரஸ், பஸ்களில் சரியான முறையில் 'ரிப்பேர்' செய்யப்படுகிறதா -- குறைபாடுகளை ஓட்டுநர் சரியானபடி குறித்து வைக்கிறாரா -- சோதனையாளர் சரி பார்த்துக் கையெழுத்திட்டாரா -- என்பதைக் குறிக்கும் 'சிட்டை'ப் புத்தகம் ஒவ்வொரு பஸ்களிலும் வைத்திருக்கிறோம்; நானே 5, 6 தடவை பஸ்களில் திடீரென்று ஏறி, அந்தப் புத்தகங்களைச் சரி பார்த்திருக்கிறேன்.

சென்ற ஆண்டில் அரசாங்கம் பஸ் போக்குவரத்தில ரூ. 83 இலட்சம் நட்டம் ஆகியது; இந்த ஆண்டு அந்த நட்டம் ரூ. 1.50 கோடி ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கையை 163-லிருந்து 250-ஆக இந்த ஆண்டு உயர்த்துவதன் மூலம் ஓரளவு இலாப -- நட்டம் இல்லாமல் போக்குவரத்து நடத்த முடியும் என்று நம்புகிறேன்.

எக்ஸ்பிரஸ் பஸ்களைக் கவனித்த பிறகு வெளியூர் பஸ்களைக் கவனிக்க வேண்டும்.

சென்னையிலிருந்து வெளியூர்களுக்குப் போகும் அரசாங்கப் பஸ்கள் எல்லாம் இரவில் சென்னையிலேயே தங்குவதால், கூட்ட நெரிசலும் -- பழுது பார்ப்பதில் தாமதமும் ஏற்படுகின்றன; இந்தக் குறையை நீக்குவதற்காக, சென்னையிலிருந்து செங்கற்பட்டு -- காஞ்சீபுரம் -- திருவள்ளூர் போய் வருகின்ற பஸ்கள் எல்லாம் இரவில் இனிமேல் செங்கற்பட்டு -- காஞ்சீபுரம் -- திருவள்ளூரில் உள்ள 'டிப்போ'க்களிலேயே நிறுத்தப்படும்; இதற்காக ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை நகரப் பஸ் போக்குவரத்து நிலைமை இன்னும் 3 மாதத்துக்குள் சீராகிவிடும்.

பாதைகள் போக்குவரத்து அளவு -- பயணிகள் எண்ணிக்கை பற்றிக் கணக்கெடுக்கத் தனிக் குழு ஒன்றை அமைக்க எண்ணியிருக்கிறோம்."

தஞ்சை மாவட்டத்தில் கயிற்றுத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பு

தஞ்சை, அக். 14—
"தஞ்சை மாவட்டத்தில் தென்னைகள் நிறைந்துள்ளதால், கயிற்றுத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது"

என்று மாவட்டக் கலெக்டர் அந்தோணி, செய்தியாளரிடம் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இப்போது எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் தேங்காய் மட்டையைக்கொண்டு கயிற்றுப் பொருள்கள் செய்து பெரும் பயனடையலாம்.

அரசின் கடனுதவியைக்கொண்டு 20 கயிற்றுத் தொழிற்சாலைகள் துவக்க சென்ற ஆண்டு அனுமதிக்கப்பட்டது; அதில் மாவட்டத்தில் ஆறு கயிற்றுத் தொழிற்சாலைகள் துவக்க ஆறு பேருக்குத் தலா ரூ. 1 இலட்சம் கடன் தரப்பட்டது; மற்றும் மூவருக்கும் விரைவில் இவ்வுதவி கிடைக்கும்."

யாகியா கானின் சட்ட ஆலோசகர் இராஜினாமா

பூட்டோ எதிர்ப்பின் விளைவா?

கராச்சி, அக். 14—
அதிபர் யாகியா கானுக்குத் தலைமைச் சட்ட ஆலோசகராக இருந்துவரும் ஏ. பி. கொர்னேலியஸ் என்பவர் இராஜினாமாச் செய்திருக்கிறார்.

முன்னாள் பாகிஸ்தான் தலைமை நீதிபதியாக இருந்த இவர் ஒரு கிறித்துவராவார்.

புதிய அரசியல் சட்டம் வகுக்கும் பொறுப்பை, யாகியாகான், இவரிடம் ஒப்படைத்திருந்தார்.

கிறித்துவரான அவர், முஸ்லிம்கள் வாழும் ஒரு நாட்டின் அரசியல் சட்டம் வகுக்க நியமிக்கப் பட்டிருப்பதை பூட்டோ கண்டித்தாராம்; இதைத் தொடர்ந்தே கொர்னேலியஸ் இராஜினாமாச் செய்ய முன்வந்திருக்கிறாராம்.

தொலைபேசித் துறையில்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தது; இப்போது 68 நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 17 நிலையங்கள் டெலிபிரிண்டர் முறைமூலம் நடைபெறுகின்றன; மற்றவை 'மார்சே கோடு' (சங்கேத) தந்தி மூலம் நடைபெறுகின்றன.

காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், கோவையில் உள்ள இந்த நிலையம் பம்பாயுடன் டெலிபிரிண்டர் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

1965 டெலக்ஸ் தந்தி முறை கொண்டு வரப்பட்டது; இதற்கு ஆதரவு பெருகிவருகிறது.

நாற்பத்தைந்து சந்தாதாரர்கள் இப்போது இந்த 'டெலக்ஸ்' முறையைக் கையாளுகிறார்கள்.

கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய்மூலம் பால் அனுப்பத் திட்டம்

ரூ. 100 கோடி செலவிடப்படும்

சண்டிகார், அக். 14—
கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய் மூலம் பால் அனுப்பப் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல், டெல்லியிலிருந்து பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் குழாய் மூலம் பால் அனுப்பப்படும்.

முக்கியமான இந்த 4 நகரங்களும் குழாய்களின் மூலம் இணைக்கப்படும்; எந்த நகரில் பால் உபரியாக இருக்கிறதோ அங்கிருந்து மற்ற நகரங்களுக்கு உடனடியாகக் குழாய்மூலம் பால் அனுப்பப்படும்.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 100 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு உலக பாங்கி ரூ. 31.50 கோடி கொடுக்கிறது.

பணமாகக் கொடுக்காமல் 1,26,000 டன் பால் பவுடரும், 42,000 டன் நெய்யும் கொடுக்கிறது; இதை விற்று அந்தப் பணத்தைத் திட்டத்திற்காகச் செலவிட வேண்டும்.

பால் கொண்டு செல்லும் குழாய்கள் பூமிக்கு அடியில் பதிக்கப்படும்; இப்போது பம்பாயிலிருந்து டெல்லிக்கு இந்தக் குழாய்கள் பதிக்கப்பட்டு விட்டன; அடுத்து டெல்லியிலிருந்து கல்கத்தாவிற்கு வேலைதொடங்கி விட்டது.

பின்பு கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் பதிக்கப்படும்.

இந்த வேலைகள் 1975-ம் ஆண்டு சூன் மாதத்திற்குள் முடிந்து விடும்.

அதன் பிறகு, சென்னைக்கும்—பம்பாய்க்கும் இடையே குழாய்கள் பதிக்கப்படும்.

பால் பண்ணை தொடங்கப்படும்

சென்னை -- பம்பாய் --- டெல்லி --- கல்கத்தா ஆகிய நகரங்களில் பெரிய அளவில் பால் பண்ணைகள் தொடங்கப்படும்; இந்தத் திட்டத்தினால் 2 கோடி மக்கள் பயன் பெறுவர்.

பின்பு, மற்ற சிறிய நகரங்களிலும் பால் பண்ணைகள் தொடங்கப்படும்.

பால் விற்பனைக்கு புதிய முறை

பால் விற்பனை செய்ய புதியமுறை விரைவில் புகுத்தப்படும்; காகிதப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு பால் வழங்கப்படும்; இந்தப் பால் 15 நாட்களுக்குக் கேடாமல் இருக்கும்.

காசு போட்டவுடன் பால் கொட்டக்கூடிய சிறிய இயந்திரங்களை முக்கிய இடங்களில் வைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது."

இந்த விவரங்களை, பால் வளர்ச்சித் துறைத் தலைவர் வி. குரியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இடது கம்யூனிஸ்டுகள் நடத்திய வேலை நிறுத்தம்

மேற்கு வங்கத்தில் பிசுபிசுத்தது

கல்கத்தா, அக். 14—
மேற்கு வங்கத்தில் நேற்று நடத்தப்பட்ட 24 மணி நேர வேலை நிறுத்தம் வெற்றி பெறவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தம் இடது கம்யூனிஸ்டு மற்றும் அதன் சார்புடைய சங்கங்களால் நடத்தப்பட்டது.

பெரிய தொழிற்சாலைகள் பலவும் வழக்கமான முறையில் இயங்கியதாகவும், ஒரு சில இடங்களில் மட்டுமே ஓரளவு வேலைகள் தடைபட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

ஆயினும், ஒரு சில வன்முறைகளும் நடைபெற்றிருக்கின்றன; இதனால் மூன்று பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

ஓரிடத்தில் மட்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பொதுவாக இந்த வேலைநிறுத்தத்துக்கு மக்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடக்க இருப்பவை

15--10--71

சங்கிலியாண்டபுரம்

எம். ஜி ஆர். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 6-30 மணிக்கு; தலைவர்: இர. துரைராசு; பேசுவோர்: எம். எஸ். வெங்கடாசலம், கு. காமாட்சி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம், எம். எஸ். மணி, கூ. ச. முருகேசன், எஸ். ஏ. ஜி. ராபி, மு. நடராசன், டி. என். வையாளி, மற்றும் பலர். (மணிசாமி குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

அக். 15 காலை 5-21 மணி: ஈரோடு: மாலை 4 மணி: ஆப்பக்கூடல்—திரு. என். மகாலிங்கம் அவர்களுக்குப் பாராட்டு விழா; 5 மணி: திரு. காட்டூர் கோபால் அவர்களுக்குப் பாராட்டு விழா; 6 மணி: சக்தி சர்க்கரை ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கட்டடத் திறப்பு.

சுகாதார நிலையத் திறப்பு

சென்னை கிருத்துவத் தொண்டுக் குழுவினரால், வெங்கட்டாபுரம் குடிசைப் பகுதியில் கட்டப்பட்டுள்ள சுகாதார நிலையம், 15—10—71 மாலை 6 மணிக்கு மேயர் திரு. சா. கணேசன் தலைமையில் முரசொலி மாறன் எம்.பி. அவர்களால் திறக்கப்பட்டு-- குடிசை மாற்றுவாரியத் தலைவர் திரு. இராம அரங்கண்ணல் அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

அரிசி-தானிய விலைகளில் மாற்றமில்லை

'கொள்முதல் இலக்கு நிறைவேறும்' என நம்பிக்கை

ஏழை மக்களுக்கு நியாயமான விலையில் உணவுத் தானியம் கிடைக்க ஏற்பாடு

முதலமைச்சர் மாநாட்டு முடிவுகள்

புதுடில்லி, அக். 14—
அரிசி, மோட்டா தானியங்களுக்கான கொள்முதல் விலைகளை மாற்றுவதில்லை என்றும், சென்ற ஆண்டின் விலைகள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும், மத்திய—வேளாண்மை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தலைமையில் முதலமைச்சர்களின் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. 'இப்போதுள்ள அரிசி வட்டாரங்கள் மாறுதல் இல்லாமல் நீடிக்கவேண்டும்' என்றும் மாநாடு முடிவு செய்தது.

1971-72-க்கு 43 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று வேளாண்மை விலைகள் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது; வெள்ளம் அல்லது வறட்சி காரணமாகத் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை நிறைவுசெய்ய இயலாது என்று சில மாநிலங்கள் கூறின.

எனினும், கூடுமான வரையில் அதிகபட்சம் கொள்முதல் செய்ய தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்வதாக மாநிலங்கள் உறுதி அளித்திருக்கின்றன என்று மத்திய அமைச்சர் பக்ருதீன் அலி அகமது செய்தியாளர்களிடம் கூறினார்.

"கொள்முதல் இலக்கை நாங்கள் மாற்றியமைக்கவில்லை; 40 இலட்சம் டன் முதல் 43 இலட்சம் டன் வரையில் அரிசி கொள்முதல் செய்ய முயற்சிப்போம்; நாட்டில் பொதுவாக உள்ள நிலைமையைப் பார்க்கும்போது, விவசாய விலைக் கமிஷன் நிர்ணயித்துள்ள இலக்கை அடைவது சாத்தியம் என்றே நம்புகிறோம்" என்றும் குறிப்பிட்டார்.

"சமுதாயத்தின் பலவீனமான பிரிவினருக்கு நியாய விலைகளில் உணவுத் தானியங்கள் கிடைக்கச் செய்யும் பொருட்டு, விநியோக முறையைப் பலப்படுத்த வேண்டும்" என்ற மத்திய அரசின் யோசனையை மாநிலங்கள் ஒப்புக்கொண்டன.

தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்குகள் மிகவும் அதிகமானது என்று மத்தியப் பிரதேசம், ஆந்திரம், ஒரிசா, அரியானா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் கருத்துத் தெரிவித்தன.

பம்பாயில் மாபெரும் விழா

பம்பாய் -- மான்கூர்டு எம். ஜி. ஆர். மன்றப் பணிமனைத் திறப்பு விழாவும் -- அண்ணா பிறந்த நாள் விழாவும் 16—10—71 மாலை 6 மணிக்கு நடைபெறும்; திரு. பா. சேக் மைதீன் தலைமையில் விருத்தாசலம் செல்வராசு எம்.எல் ஏ., அவர்கள் மன்றப் பணிமனையைத் திறந்து வைப்பார்; திரு. வி. குப்புசாமி கொடியேற்றி வைப்பார்; திரு. எம். முனுசாமி அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்.

மாலை 7 மணிக்கு பொதுக்கூட்டம், சனதா காலனி அண்ணா திடலில் நடைபெறும்; திரு. சே. எஸ். அமீது தலைமை வகிப்பார்; திரு எஸ். தியாகராசன் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்; திரு. எம். எஸ். செல்வராசு எம்.எல்.ஏ., திரு. எச். என். திருவேதி (பம்பாய் நகர காங்கிரசுக் கமிட்டி), திரு. மாதவன் (முன்னாள் பம்பாய் மேயர்) திரு. கே. கே. ஏ. நாயர், திரு. த. மு. பொற்கோ, வ. பழனி, வ. து. தங்கமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (மாலை 5-30 மணிக்கு சயா டிராம்பே நெடுஞ்சாலையிலிருந்து ஊர்வலம் புறப்படும்.)

வேலையின்மை பற்றிய நிபுணர் குழு

சென்னையில் கூடி கருத்தறிந்தது

சென்னை, அக். 14—
வேலையின்மை நிலைபற்றி ஆராயவும் -- இந்நிலையைப் போக்குவதற்கு ஏற்ற நடைமுறைகளைப் பரிந்துரைக்கவும் மத்திய அரசு நியமித்திருக்கும் வேலையின்மை பற்றிய நிபுணர் குழு, சென்னையில் கூடி, தொழில் -- வர்த்தகத் துறையின் பிரதிநிதிகள், முக்கிய அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், செயலாளர்கள், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியது; இவர்களில் பலரும் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

மின் வாரியத் தொழிலாளர்கட்கு மலை வாழ்வுப் படி

சூன் திங்களிலிருந்தே நடைமுறைக்கு வரும்-- முதல்வர் அறிவிப்பு

"பெரும்பாலான மின் வாரியத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க அந்தத் தொழிலாளர்களுக்கான மலை வாழ்வுப் படி, இந்த ஆண்டு சூன் திங்களிலேயே நடைமுறைக்கு வரும்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"மின் வாரியத் தொழிலாளர்களுக்கான திருத்திய மலைவாழ்வுப் படி (அலவன்சு) ஆகஸ்டு முதல் நாளிலிருந்து வரும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தேன்; இது இப்போது முன்கூட்டியே முன் தேதியிட்டு சூன் திங்கள் முதல் நாளிலிருந்து அமுலுக்கு வரும்"

என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

குடியரசுத் தலைவர் ஆணைக்குப்பிறகும் கங்குலியின் பிடிவாதம்

புதுடில்லி, அக். 14—
கங்குலிக்குப் பதிலாக பி. எஸ். டி. பாலிகா என்பவர் முறைப்படி இரயில்வே போர்டு தலைவரானார்.

இதற்கிடையில் சராய் ரோகில்லா இரயில் நிலையத்தில் தனி இரயில் பெட்டியிலேயே பிடிவாதமாகத் தங்கியிருக்கிறார். கட்டாய ஓய்வு உத்தரவை ஏற்க கங்குலி மறுத்துவிட்டார்; அவர் உள்ள பெட்டியிலிருந்து அவரை நீக்க அதிகாரிகளும் முயற்சிக்கவில்லை.

அஞ்சல் இலாகாவுடன் தனி ஏற்பாடு செய்து -- அஞ்சல் மூலம் கடிதம் பட்டுவாடா செய்ய இருமுறை முயற்சிக்கப்பட்டது.

இந்திய இரயில்வே விதி தொகுப்பின் 2046-வது விதி செல்லாது என்று மைசூர் உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றில் அறிவிக்கப்பட்டிருப்பதால், அந்த விதியை நடைமுறைப்படுத்துவதைக் கங்குலி தந்திமூலம் நிறுத்திவைத்தார்; இதுபற்றி அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், 'மைசூர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கங்குலியின் பிரச்சினையில் பொருந்தாது' என்று கூறினார்; 'ஏனென்றால், கங்குலி ஓய்வு பெற்ற பிறகு பென்ஷன் பெறும அதிகாரி அல்லர்' என்று அவர் சொன்னார்.

2046 (எச்) விதி கூறுவதாவது:-

'ஓர் இரயில்வே ஊழியரை ஓய்வு பெறச் செய்வது, பொது நலனுக்கு உரியது என்று அவரை வேலையில் நியமிக்கும் அதிகாரமுடையவர் கருதினால், அந்த ஊழியருக்கு எழுத்துமூலம் 3 மாத நோட்டீசோ அல்லது அத்தகைய நோட்டீசுக்குப் பதில் 3 மாத ஊதியங்கள் -- அலவன்சுகளோ கொடுத்து அவரை வேலையிலிருந்து ஓய்வுபெறச் செய்ய அவருக்கு முழு உரிமை இருக்கும்.'

கங்குலிக்குப் பென்ஷன் இல்லை; ஓய்வுபெற்றபிறகு அவருக்குப் பிராவிடண்டு நிதியும் -- தனி உதவியும் கிடைக்கும்; அது ரூ. 2 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது.

ஓய்வுபெற நோட்டீசு கொடுக்காததற்காக அவருக்கு 3 மாத ஊதியமான ரூ. 10,725-க்கு ஏற்கனவே 'செக்' அனுப்பப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செ. [illegible] சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.